பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

ஏடு 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 02 செவ்வாய்க்கிழமை (18-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 264

# இராணுவ நடவடிக்கைகள் எந்நேரமும் ஆரம்பிக்கலாம்?

## ஆயுத தளபாடங்கள் பலாலியில் குவிப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 18

யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் எந்த நேரத்திலும் இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படலாம்.

மிகவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரியவந்ததாக கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

இராணுவ நடவடிக்கையை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கரையோரப் பகுதிகள் மீது படையினர் தாக்குதல்

காரைநகர்ப் பகுதியில் இருந்து பொன்னாலை மற்றும் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு படையினர் 50 கலிபர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அராலித்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரும் நேற்றுப்பகல் அராலிப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

மண்டைதீவு, கல்முனைப் பகுதியில் இருந்தும் கரையோரப் பகுதிகளை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

[உ-3-162]

## அராலித்துறைப் பகுதியில் வேவு விமானம் நோட்டம்

அராலித்துறைப் பகுதியில் நேற்றுக் காலை 11 மணியளவில் சீ. பிளேன் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது.

ஹெலிக்கொப்டர்களும் பலாலிக்கும், காரைநகருக்கும் இடையில் அடிக்கடி பறந்த வண்ணம் இருந்தன.

அதே வேளை—

நேற்று இரவு 8.45 மணியளவில் கடற்படைப் படகில் இருந்து கரையோரப் பகுதியை நோக்கி பீரங்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. [உ-3]

## அதிபர் பதவி உயர்வுக்கு இம்முறை வெட்டுப் புள்ளி!

யாழ்ப்பாணம், ஆக. 18

இம்முறை அதிபர் தரம் 1, 2, 3 ஆகிய பதவிகளுக்கு, விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கென இனரீதியாக வெவ்வேறு வெட்டுப் புள்ளிகள் வகுக்கப்பட்டுள்ளன.

அதிபர் தரம் 1க்குரிய இலங்கைத் தமிழருக்கான வெட்டுப் புள்ளி 178 ஆகும். சிங்களவருக்குரிய வெட்டுப்புள்ளி 191 ஆகவும், முஸ்லிம்களுக்குரிய வெட்டுப்புள்ளி 176 ஆகவும் வகுக்கப்பட்டுள்ளது. இந்தியத் தமிழர்களின் வெட்டுப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சடலம் ஒதுங்கியது

கொழும்பு, ஆக. 18

கிழக்கில் மண்டூர் தம்பலவத்தை கடற்கரையில் கைகளிரண்டும் துண்டிக்கப்பட்ட நிலையில் - 20 வயது மதிக்கத்தக்க - ஒருவரின் சடலம் சில தினங்களுக்கு முன்னர் கரை ஒதுங்கியது. இச் சடலம் பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

[உ-3]

## தமிழர்கள் விடுவிப்பு

கொழும்பு, ஆக. 18

கடந்த வார ஆரம்பத்தில் கொழும்பில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீடுகள், விடுதிகள் ஆகியவற்றில் வைத்து திடீரென கைது செய்யப்பட்ட சுமார் 400 தமிழ் இளைஞர்களில் 25 பேர் தவிர ஏனையோர் சில நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-8]

## சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா மற்றும் 13 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட 18 பேரும் சென்னையில் நேற்று இதற்கென அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் இக் கொலைகளுக்கு ஏதோ ஒரு வகையில் உடந்தையாகவோ அல்லது அதனை மறைக்க ஒத்துழைத்ததாகவோ குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

முன்னாள் தி. மு. க. அமைச்சர் சுப்புலட்சுமி, அவரது கணவர் ஜெகதீஸன், வை. கோபாலசாமியின் தம்பியான வை. ரவிச்சந்திரன் ஆகியோர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

கண்ணிவெடியில் சிக்கி

## மட்டக்களப்பில் 2 சிப்பாய்கள் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தோற்றாத்தீவு என்ற இடத்தில் கண்ணிவெடி ஒன்று வெடித்ததில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட 'கிளைமோர்' கண்ணிவெடி ஒன்றை செயலிழக்க செய்ய முற்பட்ட சமயம் அது வெடித்ததில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்தது. [உ-எ-3-10]

## 178 பரல் தே. எண்ணெய் "குமாரி" கப்பலில் வந்தது

நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த 'குமாரி' கப்பலில் 178 பரல் தேங்காய் எண்ணெய் எடுத்து வரப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் அதிகளவு தேங்காய் எண்ணெய் இங்கு எடுத்துவரப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

எடுத்துவரப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் உடனடியாக ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக மக்களுக்கு விநியோகிக்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் 3 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களும் 'குமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

ஆயிரத்து 600 மெற்றிக் தொன் மா, ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் சீனி, 60 பரல் மண்ணெண்ணெய், 10 மெற்றிக் தொன் ரின் மீன், கொத்தமல்லி என்பனவும் அவற்றுள் அடங்கும். [உ]

## நேற்று கப்பலில் வந்த தபால் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 18

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த "குமாரி" கப்பலில் 362 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டன. அவை உடனடியாக நேற்று மாலையே யாழ். பிரதம தபாலகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

இன்று நகருக்கு வெளியில் உள்ள தபாலகங்களுக்கு தபால் பொதிகள் அனுப்பப்படும் என்றும் —

யாழ். நகரத் தபால்களில் ஒரு பகுதி இன்றே விநியோகிக்கப்படும் என்றும் நேற்றிரவு தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமைபோல் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் தபால் பொதிகளை பருத்தித்துறையில் இருந்து எடுத்துவர யாழ். பிரதம தபால் நிலைய அதிகாரிகள் முயற்சி எடுத்த போதும், அது பலன் அளிக்கவில்லை.

யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. க. இராசேந்திரம் யாழ். அரச அதிபர் திரு.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# பிரபாவைச் சந்திக்கப் பிசாசு ஒன்று படையினர் தரப்பில் காத்திருக்கிறது!

### உயிரிழக்க முன் இப்படிச் செய்தி அனுப்பினராம் பிரிகேடியர் விமல

கொழும்பு, ஆக. 18

பிரிகேடியர் விஜய விமலரத்னவை நான் சந்தித்த போது "யாழ்ப்பாணத்தில் திரு. பிரபாகரனை நான் சந்திக்கக் கூடும். அவரிடம் தெரிவிக்க செய்தி ஏதும் உண்டா?" — என்று கேட்டேன்.

அதற்கு விமலரத்ன புன்சிரிப்புடன் "அவரிடம் சொல்லுங்கள் மறுபக்கத்தில் அவரைச் சந்திக்க பிசாசு (Devil) ஒன்று காத்திருக்கிறது." — என்று பதிலளித்தார்.

—இவ்வாறு "ஏஸியாவீக்" சஞ்சிகையின் ஆகஸ்ட் 14 இதழில் அதன் செய்தியாளர் ஜோன் கோமி (John Colmey) எழுதிய செய்திக் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

"நீண்ட கதை" என்ற தலைப்பில், 11 பக்கங்களில் எழுதப்பட்டுள்ள இந்த நீண்ட செய்திக் கட்டுரை "ஏஸியா வீக்" சஞ்சிகைக்கு பிரசுரத்துக்கு அனுப்பப்பட்டபோது பிரிகேடியர் விஜய விமலரத்ன உயிரோடிருந்தார் என்பதும்—

அந்தச் சஞ்சிகை வெளியான வேளையில் பிரிகேடியர் விஜய விமலரத்ன அராலித்துறை கண்ணிவெடியில் உயிரிழந்துவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

அந்த செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொப்பே கையளித்த வீடியோ

கொழும்பு, ஆக. 18

டென்சில் கொப்பேகடுவ உயிரிழப்பதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்து அவரிடம் கையளித்த வீடியோ நாடா வவுனியா மக்களைப் பற்றியதே.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

**நாட்டினைக் காக்க காட்டினை வளர்ப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்மலானை கொள்ளை சம்பவம்:

# இராணுவத்தை விட்டு விலகியவரின் கைவரிசை?

கொழும்பு, ஆக. 18
இரத்மலானையில் கடந்த வாரம் ரயில்வே ஊழியருக்குரிய 50 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் சதிகாரர்களின் செயலா, அல்லது ஆயுதங்களுடன் இராணுவத்தை விட்டு விலகியவர்களின் கைவரிசையா என்பது குறித்து இரகசியப் பொலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து எட்டுப் பேரிடம் இருந்து முக்கிய தகவல்களைப் பொலீஸார் பெற்றுள்ளனர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (த-எ)

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 18
விடுதலைப் புலிகள் போராளிகளும், செஞ்சோலையின் இசைக்குயில்களும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி இன்று இரவு 8.30 மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறும். (உ)

★ ★ ★

சுழிபுரம், ஆக. 18
சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையத்தின் எட்டாம் ஆண்டு பொதுக் கூட்டமும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (-28)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 18
அச்சுவேலி - பத்தைமேனி தீர்த்தாங்குளப்பதி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

26 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ)

★ ★ ★

கொழும்புத்துறை, ஆக 18
யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதி, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் விஷேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (உ-30)

# ஆங்கில ஆசிரியரை தெரிவு செய்யப் பரீட்சை

## வர்த்தமானியைப் பார்க்கலாம்

யாழ்ப்பாணம், ஆக. 18
மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ், ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான 1992 ஆம் ஆண்டுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாத [செப்டம்பர்] இறுதியில் நடைபெறவுள்ளது.

ஜீ. சி. ஈ [சாதாரண தர] பரீட்சையில், தமிழ் மொழி உட்பட மூன்று திறமைச் சித்திகளுடன் இரண்டு அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு, ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றவர்கள் இப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 18 முதல் 40 வரையாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)


## வலி. வடக்கு பிரதேசசபை,

காங்கேசன்துறை (மல்லாகம்)

## கேள்வி விளம்பரம்

28-8-1992 அன்று [வெள்ளிக்கிழமை] காலை 10-00 மணிவரை வீதி அமைப்பு வேலைகள், தளபாடங்கள் / விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு ஆகியவற்றிற்கான கேள்விகள் / கூறுவிலைகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் மாலை 2-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ஒவ்வொரு வேலைக்கும் வைப்புப் பணம் ரூபா 250/-உம், கிரயப்பணம் ரூபா 100/-உம் செலுத்தி 25-8-1992 நண்பகல் 12-00 மணிக்கு முன்பு வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமைப் பணிமனையில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

கா. சந்திரராசா
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

பிரதேச சபை தலைமை அலுவலகம்,
96, யாழ் வீதி,
மல்லாகம், 13-8-1992

(சி/2499)



யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

உடற் கல்விப் போதனாசிரியர் தரம் 11 (ஆணும், பெண்ணும்) பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-09-15-ம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:
3,500-10x100-4,500/- மாதமொன்றுக்கு

தகைமைகள்:

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் உடற் கல்விப்பட்டம் அல்லது உடற்கல்வியில் அதற்குச் சமமான அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டமொன்றைப் பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களைஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதில் ஐந்தாண்டு அனுபவம்.

அல்லது

ஆ) நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய தேசிய விளையாட்டு அணி ஒன்றின் உறுப்பினராகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரி அல்லது பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்த பட்சம் ஆறாண்டு அனுபவமுடைய தேசிய வீர முதல்வன்.

அல்லது

இ) தேசிய விளையாட்டு அணியில் உறுப்பினராகவிருந்த எட்டு ஆண்டுகளுக்கு குறையாத சேவையுடன் அத்தரத்தில் எட்டு ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தைக் கொண்டுள்ள உடற்கல்விப் போதனாசிரியர்;

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு
நேர்முகப் பரீட்சை மூலம்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களையும், விவரங்களையும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச.மீ. அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

உடற்கல்விப்போதனாசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-13.

(சி-3061)



## யாழ். பல்கலைக் கழகம்

## மகாபொல கொடுப்பனவு 8ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| **முதலாம் வருடம்** | | |
| மருத்துவபீடம் / கலைப்பிரிவு | 18 — 08 — 1992 | 9-00 — 12-00 மு. ப. |
| வர்த்தகப்பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 20 — 08 — 1992 | 9-00 — 12-00 மு. ப. |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு / பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 24 — 08 — 1992 | 9-00 — 12-00 மு. ப. |
| **இரண்டாம் வருடம்** | | |
| மருத்துவபீடம் / கலைப்பிரிவு | 18 — 08 — 1992 | 1-30 — 3-00 பி. ப. |
| வர்த்தகப்பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 20 — 08 — 1992 | 1-30 — 3-00 பி. ப. |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு / பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 24 — 08 — 1992 | 1-30 — 3-00 பி. ப. |
| **மூன்றாம் வருடம்** | | |
| கலைப்பிரிவு / வர்த்தகப்பிரிவு | 19 — 08 — 1992 | 9-00 — 12-00 மு. ப. |
| வியாபார நிர்வாகப் பிரிவு / மருத்துவபீடம் | 21 — 08 — 1992 | 9-00 — 12-00 மு. ப. |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு / பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 27 — 08 — 1992 | 9-00 — 12-00 மு. ப. |
| **நான்காம் வருடம்** | | |
| கலைப்பிரிவு / வர்த்தகப்பிரிவு | 19 — 08 — 1992 | 1-30 — 3-00 பி. ப. |
| வியாபார நிர்வாகப் பிரிவு / மருத்துவபீடம் [4ஆம், 5ஆம் வருடங்கள்] | 21 — 08 — 1992 | 1-30 — 3-00 பி. ப. |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு / பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 27 — 08 — 1992 | 1-30 — 3-00 பி. ப. |

1ஆம், 2ஆம் வருட விவசாயபீட மாணவர்களுக்கான மேற்படி கொடுப்பனவு விவசாயபீடத்தில் கொடுக்கப்படும்.

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

- பதிவாளர்.

(இ-3066)



## கண்ணீர் அஞ்சலி



## செல்வி சுகிர்தம் நாராயணசாமி

(16-08-92) நேற்று முன்தினம் அமரத்துவமெய்திய யாழ்ப்பாணம் மக்கள் வங்கி நவீனசந்தைக் கிளை ஊழியராகிய செல்வி சுகிர்தம் நாராயணசாமி அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

ஸ்ரான்லி வீதிக் கிளை,
யாழ்ப்பாணம்.
(5257)

தகவல்:
முகாமையாளரும்,
ஊழியரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைப்பை இ. தொ. கா. வலியுறுத்தும்

## அமைச்சர் தொண்டமான்

கொழும்பு, ஆக. 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் தீர்வில் வடக்கு-கிழக்கு இணைப்பு இடம் பெறாவிட்டால், தமிழ்க்கட்சிகளுடன் சேர்ந்து இணைப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தும்.

அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்;

வட மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் ஒரே அதிகாரப் பரவலாக்கப் பிராந்தியமாகக் கருதாத எந்த ஒரு அரசியல் தீர்வு முயற்சியும் அர்த்தமற்றது. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத அத்தகைய தீர்வு ஒன்றை முன்வைப்பதில் என்ன பயன்?

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்கள் வாழும் ஒரு பிரதேசமாகும்; இவற்றை இணைக்க வேண்டும் என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அவை இணைந்துதான் இருக்கின்றன. இணைக்க வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்திய - இலங்கை உடன்படிக்கையில் கூட வடக்கு - கிழக்கு தற்காலிக இணைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

இதே வேளை --

முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனைகளை தமிழ்க் கட்சிகள் விரும்பவில்லை என்று ''தஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கின்றது. [த-எ]

## ஜீ.சீ.ஈ. விடைத்தாள் திருத்தும் வேலைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஆக. 18

ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் வேலை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என்றும்—

விடைத்தாள்களைத் திருத்தும் பணிக்கு என 4 ஆயிரத்து 200 பேர் திரட்டப்பட்டுள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

விடைத்தாள் திருத்தும் பணி இம்மாதம் 31 ஆம் திகதி முடிவடையும்.

கொழும்பில் 12 மத்திய நிலையங்களில் விடைத்தாள் திருத்தும் பணி இடம்பெறும். [த-எ]

## அரச சேவையில் பணிபுரியும் பட்டதாரி எழுதுவினைஞர்; புதிய சம்பளத் திட்டம்

அரச சேவையில் எழுதுவினைஞர்களாகப் பணிபுரியும் பட்டதாரிகளுக்கு புதிய சம்பளத் திட்டம் ஒன்றும், பதவி உயர்வுத் திட்டம் ஒன்றும் கொண்டுவரப்படவுள்ளன;

இது தொடர்பாக அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதாக பொதுநிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சம்பளத்திட்டம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக ஒரு மாத காலத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்கும்படி சம்பள நிர்ணய குழுவை பிரதமர் டி. பி. விஜேதுங்க தலைமையிலான அமைச்சரவை உபகுழு கோரியிருப்பதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

## ஜெயலலிதா நடிக்கிறார்

சென்னை, ஆக. 18

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா திரைப்படம் ஒன்றில் நடிக்க இணங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மது அருந்தும் பழக்கத்தால் ஏற்படும் சீரழிவுகளை விளக்கி வர்த்தக ரீதியில் டைரக்டர் விசு எடுத்து வரும் ஒரு படத்திலேயே ஜெயலலிதா நடிக்க உள்ளாராம்.

கணவனின் மதுப் பழக்கத்தால் நலிவடைந்த ஒரு பெண் முதலமைச்சரிடம் உதவி பெறுவதாக இப் படத்தில் ஒரு காட்சி வருகிறது.

இக் காட்சியில் முதலமைச்சராக முதலமைச்சர் ஜெயலலிதாவே தோன்றுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப் படம் அக்டோபர் 2ஆம் திகதி வெளியாகும். [இ-10]

## வட-கிழக்கு இணைப்புக்கு இவர்களும் ஆதரவு!

கொழும்பு, ஆக. 18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளை உள்ளடக்கியதான முஸ்லிம் மாகாண சபையை தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு பூரண ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கூறும் தீர்மானம் ஒன்று புத்தளம் நகரசபை மண்டபத்தில் கூடியிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட வடமாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. [த-எ]

## கனத்தைக் கதவுகளை பொலீஸார் மூடினராம்

கொழும்பு, ஆக. 18

காலஞ்சென்ற ஜெனரல் கொப்பேகடுவவின் பூதவுடல் கடந்த திங்களன்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்ட போது பொலீஸார் மயானத்தின் கதவுகளை மூடியிருந்தனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது (த)

## கண்டியில் பக்தர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்கு!

கண்டி, ஆக. 18

கண்டி, திகண, அலுவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழாவின் போது பக்தர்களும், ஆலய உறுப்பினர்களும் இனந்தெரியாத விஷமிகளால் தாக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இது பற்றித் தெரிவிக்கப்படுவதாவது;

மாரியம்மன் தேர் பவனி திகண பழைய நகரை வந்தடைந்த போது சுமார் 30 முதல் 40 வரையானவர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று சைக்கிள் செயின், குண்டாந்தடிகள், கூரிய ஆயுதங்கள் என்பவற்றால் பக்தர்களைத் தாக்கத் தொடங்கினர்.

இது தொடர்பாக இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜிடம் ஆலய நிர்வாகிகள் முறையிட்டுள்ளனர்.

தாங்கள் பொலீஸ் பாதுகாப்புக் கோரியிருந்த போதும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அராலி கண்ணிவெடிச் சம்பவத்தில் பலியான கோர்ணல் ஸ்டீபன் கண்டியைச் சேர்ந்தவர் என்பது தெரிந்ததே. [த]

## நியமனம்

வவுனியா தெற்குப் பிரதேச (தமிழ்ப்பிரிவு) செயலகத்தின் அதிகாரியாக திரு. எஸ். அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கிளிநொச்சி மேலதிக அரச அதிபராகப் பணிபுரிந்தார். [த-எ]

## உபவேந்தருக்கு அறிவிக்கவில்லையாம்

கொழும்பு பல்கலைக்கழக வளவுக்குள் போலி இராணுவ முத்திரைகள் பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றித் தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார். [த]


மொடேண் எடியுக்கேசன் சென்ரர்
கரவெட்டி

துரித மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்

★ இரசாயனம் ★ தாவரவியல்
★ பௌதீகம் ★ விலங்கியல்
★ கணிதம்

ஆரம்பம்:
20 - 08 - 1992

[22206]



31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 19 — 03 — 1929



உதிர்வு: 19 — 07 — 1992

திருமதி யோசப் றோசம்மா
(யோகம்)

மறக்க வருமோ உனது
வர்ண முகம் காணாமல்
உறக்கம் வருமோ யோகம்மா
உன்னை விட்டு நானிருக்க

பொழுதொரு கணமும் இந்தப்
புவியினில் உனை நினைந்து
அழுதிட வைத்து அம்மா
அகன்றதும் விதியின் சூதோ
விழுதிடு தருவினைப்போல்
வேரென நீ இருந்தாய்
தொழுதிடும் தெய்வம் போலும்
தூய்மைக்குள் தூய்மை ஆனாய்!

ஆறுதல் ஒன்றே உந்தன்
அரவணைப்பதனில் கண்டோம்
நூறு பல்லாண்டு தானும்
நொந்துளம் புலம்பினாலும்
தேறுதல் காணேன் அம்மா
திருவே நீ பிரிந்த துன்பம்
மாறுதல் இல்லை நெஞ்சில்
மலர்ச்சியும் வாழ்வில் இல்லை!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்-
புலம்பல்.

42, கோவில் வீதி,
நல்லூர். (22203)



விற்பனையாகின்றன!
ஆண்டு — 5
புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வினாத் தாள்கள்-விடையுடன்
கணிதம், தமிழ்
BOND
புத்தக நிலையம்,
88A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-3145]



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பண்டத்தரிப்புக் கோட்டம்

விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 19 — 08 — 1992 (புதன்கிழமை)
மாலை 3-30 மணி

இடம்: சித்தன்கேணி கணேச வித்தியாசாலை

விடயம்: [அ] பதிவை உறுதிசெய்தல், பதிவுசெய்தல்
[ஆ] நிதி சேகரிப்பு பற்றிய விளக்கம் கல்விப் பிரிவு பொறுப்பாளர்களால் வழங்கப்படுதல்.

முக்கிய குறிப்பு:
(i) இக்கூட்டத்தில் சகல நிறுவன இயக்குநர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டு தமது பதிவை மீள உறுதிப்படுத்தவும். சமுகம் தராதவர்களின் பதிவுகள் மீள உறுதிப்படுத்தப்படமாட்டாது.
(ii) பதிவு செய்யாமல் கற்பிக்கும் சகல பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களையும் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம். பதிவு செய்யாமல் கற்பிக்கும் ஆசிரியருக்குரிய இறுதி அறிவித்தல் இதுவாகும்.

நன்றி.

நிர்வாகக்குழு,
த. க. நி. ஒ. பண்டத்தரிப்புக்-
கோட்டம்.

[5255]



இந்த இடம் ஞாபகம் இருக்கின்றதா?
இதோ!
அறிமுகப்படுத்துகின்றோம்!
முற்றிலும் புதிய பானம்
உள்ளூரில் காற்றூட்டப்பட்ட
மென்பானம்
புதிய சுவை, தரம். சர்வதேச தரத்திற்கு ஒப்ப உங்கள் தணியாத தாகத்தை பூர்த்தி செய்ய
உங்கள் கரத்தை வந்தடைகின்றது.
இனிமை நிறைந்த பல சுவைகளில்
நாளை விடிந்தால் தெரியும் விடை
[இதே இடம்] (விளம்பர அமைப்பு: செனித் ஜோ எக்...)
(22170)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01. செம்மணி வீதி, நல்லூர் முதிரைச் சந்தை, (சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு)

[22205]

### சோதிடம்

கல்வியில் சித்தியா, உத்தியோகம் கிடைக்குமா, வியாபாரம் சிறக்குமா, விவாகம் நடைபெறுமா ஜாதகக் குறிப்பு எழுதிப் பலன் அறியவும், கைரேகை, எண்சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு: தினமும் காலை 8-00 மணி முதல் 12-00 மணி வரை: த. சிவானந்தன், பிரபலசோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3-00 மணி முதல் 6-00 மணி வரை.

[22175]

### A/L மாணவர்களுக்கு

இந்து நாகரிகம் இதழ்-6 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: க. சி. குலரத்தினம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(சி/3138)

### ஜீவாகாரம்

குறைந்த செலவில் நிறைவான உணவாகவும், போஷாக்கு குறையை நீக்கவும் பாவியுங்கள் ஜீவாகாரம், இதில் 100g. ஜீவாகாரத்தில் 17g. புரதமும் 400 கிலோ. கலோரி சக்தியுமுண்டு. உங்கள் தேவைக்கு ஏற்ப தொகையாகவும் சில்லறையாகவும். பெற்றுக்கொள்ளலாம். அன்னா தொழிலகம், இணுவில்.

(சி/3143)

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, பிரான்வீதி, யாழ்ப்பாணம்.

[5237]

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை 18-08-92 செவ்வாய் முற்பகல் 7-00, பிற்பகல் 1-00 மணி நேரங்களில் நடைபெறும். வெளிமாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(22199)

## சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம், (வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் 23-08-92 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்பதனை பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தல் இடம்பெயர்ந்த சங்கப் பொதுச் சபைப் பிரதிநிதிகளின் கவனத்திற்கு தெரியப்படுத்தப் படுகின்றது. சகல உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே நிகழ்ச்சி நிரல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாத பொதுச்சபைப் பிரதிநிதிகள் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

- செயலாளர்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். 17-08-92

[இ-2494]

## ஈராண்டு நினைவலைகள்



| தாயின் மடியில்: | | மணலாறு மண்ணில்: |
|---|---|---|
| 12 | | 18 |
| — | | — |
| 09 | | 08 |
| — | | — |
| 1972 | | 1990 |

## வீரவேங்கை முப்பனார்
### (முத்துலிங்கம் பிரியதாஸன்)

ஆண்டிரண்டு ஆனதடா ஆசைத் தம்பி உன் ஆவியகன்று
ஆறிடுமா எமது துயர் ஆற்றிட நீயே வரவேண்டும்
ஆண்டு இரண்டரை ஆனதடா எமதில்லப்படி நீ தொட்டு
உயிருடனும் வரவில்லை உயிரற்றும் நீ வரவில்லை
மண்ணை மதித்தாய் மணலாறில் நீ விதையானாய்
மறப்போமா உன் நினைவை என்றும் - எம்
நெஞ்சகத்தில் நீ வாழ்வாய்.

துயரில் வாடும்;
குடும்பத்தினர்.

ஆர். கந்தையா வீதி,
சாவகச்சேரி.

[சி-1000]

## நெல்லியடியில் V.E.C. கல்வி நிறுவனம்

## A/L 93

**PAPER CLASS**

**20 — 08 — 1992**
வியாழன்

★ இரசாயனம்
சண் 2 — 3p.m
★ தூய.பிரயோக கணிதம்
அருளானந்தம் 3 — 5p.m
★ தாவரவியல்
குணசீலன் 3 — 4p.m
★ பௌதிகம்
சோதிலிங்கம் 5 — 6p.m

[22159]

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 92-09-04 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பதவி:**
சுகாதாரத் தொழிலாளி (தாழ்தரம்)

**சம்பளத் திட்டம்:**
ரூபா 1775-8x30-2015/- மாதமொன்றுக்கு.
[இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்]

**தகைமைகள்:**
1. மலசலகூடங்கள், வடிகால்கள் முதலியனவற்றைச் சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**
பொது வளச்சார் பறி பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

**குறிப்பு:**
உணவு முத்திரை பெற்றுள்ள குடும்ப அங்கத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரையொட்டிய 23x10 செ. மீ. அளவுடைய கடித உறைகளை அனுப்பித் தபால் மூலமாகவோ பெற விரும்புவோர், இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விவரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-14.

(சி/1000)

நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
## உதயன் ஆதரவுடன்
## இந்து சமயப் பேரவை
நடத்தும்
## சைவசமய வினா-விடைப் போட்டி

இளவயதினர் மத்தியில் சமய அறிவைப் பெருக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இப்போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட சகலரும் பங்குபற்றலாம். (மாணவர்கள் பாடசாலை அதிபர் மூலமும் ஏனையோர் தங்கள் பகுதிக் கிராம சேவகர் மூலமும் வயதினை உறுதிப்படுத்த வேண்டும்.)

கீழே உள்ள வினாப் படிவத்தை நிரப்பி இம் மாதம் 21ஆம் திகதிக்குப் பிந்தாமல் நல்லை ஆதீனத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தபால் மூலம் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

போட்டியில் சிறப்பாகத் தேறும் மூவருக்குப் பெறுமதி மிக்கப் பரிசில்களும், மற்றும் ஐவருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

பரிசளிப்பு நல்லூர் தேர்த்திருவிழாவன்று [26-08-1992] நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

## வினாப் படிவம்

1. வேதநாயகனே போற்றி என்ற பாடல் எந்த நூலில் உள்ளது? அல்லது யாரால் பாடப்பட்டது என்பதை எழுதுக. ..............................
2. இந்துசமயத்திற்கும் சைவசமயத்திற்கும் உள்ள வேறுபாடு யாது? ..............................
3. தமிழீழத்திலுள்ள முருகன் கோவில்கள் ஐந்தின் பெயர் எழுதுக. ..............................
4. வாய்கட்டிப் பூஜை செய்யும் மூன்று கோவில்களின் பெயர் தருக. ..............................
5. முருகனைக் குறிப்பிடும் தமிழ் மந்திரம் யாது? வடமொழி மந்திரம் யாது? ..............................
6. நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் சிறப்புகள் இரண்டு எழுதுக. ..............................
7. நித்திய பூசையே பெருவிழாப் போல நடைபெறும் கோவில் யாது? ..............................
8. நல்லூரின் வருடாந்த உற்சவம் ஆண்டுதோறும் எப்போது நடைபெறுகிறது? ..............................
9. நல்லைக் கந்தனுக்கு வேறு பெயர் யாது? ..............................
10. நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானத்தின் பெயரைப் பூரணமாக எழுதுக. ..............................
11. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் யாரால் கட்டப்பட்டது? ..............................
12. பஞ்சரதம் ஓடும் கோவில்கள் எவை? ..............................
13. பெண்கள் தேர் இழுக்கும் கோவில்கள் எவை? ..............................
14. குமாரபுரம் எங்குள்ளது? ..............................
அங்கிருந்த பழைய விக்கிரகங்கள் இன்று எங்கிருக்கின்றன? ..............................
15. வண்ணார்பண்ணையிலுள்ள பெருமாள் கோயில் யாரால் கட்டப் பெற்றது? ..............................
16. எங்கள் நாட்டில் வாழ்ந்த ஞானியர் பரம்பரையைக் குறிப்பிடுக. ..............................
17. சுப்பிரமணிய பாரதியாரின் ஞான குருவாக விளங்கியவர் யார்? ..............................
18. சுவாமி முத்தியானந்தரின் மறு பெயர் யாது? ..............................
19. கடையிற்சுவாமிகளின் குரு யார்? ..............................
20. யோகர் சுவாமிகளின் அயல்நாட்டுச் சீடர்கள் மூவரின் பெயரைக் குறிப்பிடுக. ..............................
21. கடையிற் சுவாமிகள் இந்த நாட்டிற்கு வருவதற்கு முக்கிய காரணராக இருந்தவர் யார்? ..............................
22. நல்லூர்த் தேரடிக்குச் சமீபமாக உள்ள சமாதி யாருடையது? ..............................
23. அருணகிரிநாதர் அருளிய நூல்கள் எவை? ..............................
24. இந்து சமயப் பேரவையின் தலைமைக்காரியாலயம் எங்குள்ளது? ..............................
25. இந்துசமயப் பேரவையால் நடாத்தப்பெறும் சைவச் சிறார் இல்லம் எங்குள்ளது? ..............................

பெயர்:
விலாசம்:
வயது:

விண்ணப்பதாரர் 16 வயதுக்கு உட்பட்டவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்:
இவரது பிறந்த திகதி:

பாடசாலை அதிபர் / கிராம சேவை அலுவலர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

## இரண்டாம் பேச்சில்லை!

அராலியில் உயிரிழந்த படைத் தளபதிகளுக்கு அளிக்கப்படும் பெரும் கௌரவம், வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றிவாகை சூடுவதே— என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பலாலியில் படையினர் மத்தியில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

இயக்கச்சியில் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டமை, செட்டிகுளத்தில் இராணுவ முகாம் நிர்மூலமாக்கப்பட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டமை, கிழக்கில் அடுத்தடுத்து நடந்த அதிரடித் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான படையினர் உயிரிழந்தமை என்று தொடர்ந்து வந்த தோல்விகளின் — இழப்புகளின்— உச்சக்கட்டமாக அராலி நிலக்கண்ணி வெடித்தாக்கு அமைந்தது.

ஏற்கனவே போர்க்களத்தில் நின்று சமரிடப் பயந்து, நாலாயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய பின்னணியில், விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து ஈட்டிய மேற்கண்ட வெற்றிகளால் அரச துருப்புக்கள் மனம் பேதலித்துப் போய், சலித்துப்போய் சோர்வடைந்து உள்ளனர்.

அவ்வாறானவர்களை சண்டையில் ஈடுபடுத்துவதற்கு உற்சாக வார்த்தைகளும் உணர்ச்சி தரும் உரைகளும் அவசியம் தான்!

இந்த யுத்தம் வெல்ல முடியாத ஒன்று. அர்த்தமற்ற ஒன்று—என்றெல்லாம் ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறி வந்திருக்கிறார், ஆனால் அமைச்சர்களும், படை அதிகாரிகளும் யுத்தத்தில் வெற்றிவாகை சூடப்போவதாகக் கர்ச்சிக்கிறார்கள்!

எதிர்வரும் அக்டோபர் மாதத்திற்குள் யுத்தத்தில் வெற்றி அடைந்து விடப் போவதாகவும், 1993 ஜூலைக்கு முன் வெற்றியுடன் போரை முடிக்கப்போவதாகவும் கூறிய தளபதிகள் விஜய விமலரத்னாவும், கொப்பேகடுவவும் ஒரே நாளில் உயிரிழந்திருக்கிறார்கள்!

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விரைவில் இந்த யுத்தத்தில் வெற்றி ஈட்ட வேண்டும் – என்று கூறிய அடுத்த விநாடியே விமலரத்தினாவின் உயிர் பிரிந்தது!

கடந்த இரண்டேகால்வருடப் போரைப் பார்த்ததில், இந்த யுத்தம் வெற்றியுடன் முடியும் என்பதற்கான சாத்தியம் எதுவும் தென்படவில்லை. இது அரசியல்வாதிகளுக்கும், படை அதிகாரிகளுக்கும் தெரியாததுமல்ல.

ஆனாலும் அவர்கள் அதனைத் தொடரவே விரும்புகிறார்கள்: கொப்பேகடுவ வகுத்த இராணுவத் திட்டப்படி வடக்கில் தாக்குதல்களைத் தொடங்கப்போவதாக புதிய தளபதி ஜெரி. டி. சில்வா அறிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பிரித்துக்காட்டி போரைத் தொடர்வதே அரசாங்கத்தின் திட்டம். போரை முடிவுக்குக் கொண்டு வந்தால், இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டால் அரசியலில் உயிர்வாழ வேறு பகடைக் காயைக் கண்டுபிடிப்பது கஷ்டம்.

இதுவே உண்மையான பின்னணி. தெற்கில் அரச, எதிரணிக் கட்சிகள் பதவியைக் கைப்பற்ற இலகுவில் கைகொடுப்பது இனப்பிரச்சினையே. ஆகையால் எந்த அழிவின் மத்தியிலும், எத்தகைய பெரும் தோல்வியின் மத்தியிலும் போர் தொடரவே போகிறது. இரண்டாம் பேச்சில்லை!

### மகரகம ஆஸ்பத்திரியில் இடம் இல்லையென்பதால்

# கப்பலில் கூட்டிச் செல்லும் நோயாளர் எண்ணிக்கையைக் குறைப்பது தவறாகும்

### செஞ்சிலுவை சங்கத்திடம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஆக. 18

மகரகம ஆஸ்பத்திரியில் இடம் இல்லை என்பதால் கொழும்புக்குக் கப்பலில் கூட்டிச் செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது தவறாகும்.

''நோய் இனங்காணவும், சிகிச்சை பெறவும் எனக் கொழும்புசெல்லும்நோயாளிகளுக்கான போக்குவரத்து வசதிகளை காலதாமதமின்றி செய்ய வேண்டியது செஞ்சிலுவைச் சங்கத்தினதும் வைத்தியர்களினதும் மனிதாபிமானப் பணிகளில் முதன்மையான ஒன்றாகும்''.

யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமை அதிகாரிக்கு, வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்ச் சூழலில் குடாநாட்டின் இருந்து வெளியிடங்களுக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள்இல்லாத நிலையில் அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளிகளும், நோய் ஆய்வு செய்யவேண்டியவர்களும் பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஏற்படும் காலதாமதம் அவர்களை நோய் முற்றிய நிலைக்கு — குணப்படுத்த முடியாத நிலைமைக்கு — இட்டுச் செல்கிறது.

நோய் எதுவென நிர்ணயம் செய்யாத நிலையில் ஒரு நோயாளிக்கு இங்கு வைத்து சிகிச்சை அளிக்க முடியாது.

மகரகம ஆஸ்பத்திரியில் உள்ள இடவசதிகளுக்கு ஏற்ப இங்குள்ள புற்றுநோயாளர்களைக் கொண்டு செல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இங்கிருந்து செல்லும் நோயாளிகள் கொழும்பிலும், ஏனைய இடங்களிலும் தமது வசதிக்கு ஏற்ப பரிசோதனைகளையும், சிகிச்சைகளையும் செய்து கொள்ளலாம். அது அவர்களின் அடிப்படை உரிமை சம்பந்தப்பட்டது.

எனவே இங்கிருந்து நோயாளிகளை கொண்டு செல்லும் விடயத்தில் உள்ள அவசியத்தை, அதன் கட்டாயத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கி தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் — இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் யாழ். அரச அதிபர், யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## தென்னை மரங்களில் கருவண்டின் தாக்கம்

தற்போது குடாநாட்டின் பல பகுதிகளிலும் தென்னை மரங்களுக்கு சேதத்தை உண்டாக்கும் கருவண்டின் தாக்கத்தினை அவதானிக்கக்கூடியதாக உள்ளதென தமிழ்ழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

கருவண்டுத் தாக்கத்தினால் தென்னம் நாற்றுக்கள், இளம் தென்னம் பிள்ளைகள், உட்பட முதிர்ந்த தென்னை மரங்களும் பாதிப்படைந்து வருகின்றன.

தென்னை மரக்குருத்தின் அடிப்பாகத்திலுள்ள மென்மையான பகுதிகளை இவ்வண்டுகள் தாக்குவதால் தென்னை மரங்கள் பட்டுப் போகும் ஆபத்து ஏற்படுகின்றது.

கருவண்டுத் தாக்கம் பரவலாகக் காணப்படின் முதிர் மரத்துக்கு 10 மி.லீ. மொனோ குறோட்டபோஸ் மருந்தை ¾போத்தல் நீருடன் கலந்து தெளிக்க வேண்டும் என்றும் —

இளம் தென்னம்பிள்ளையாயின் 5 மி.லீ. மருந்தை ¾போத்தல் நீருடன் கலந்து குருத்துப்பாகம் நீரில் நனைய வாரத்தில் இரண்டு முறை தெளிக்க வேண்டும் என்றும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த]

## நல்லை ஆதீனத்தின் 26 ஆவது நிறைவு விழா வெள்ளியன்று

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இருபத்தாறவது ஆண்டு நிறைவு (பீடாரோகண) விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை – 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நிறைவு விழாவையொட்டி ஆதீனத்தில் காலையில் ஸ்நபனாபிஷேகம், கொலுப் பூசை, பட்டணப் பிரவேசம் என்பன இடம்பெறும்.

பகலில் மகேசுர பூசையும், பிற்பகலில் புராண படனம், சமயச் சொற்பொழிவுகள் ஆகியனவும் நடைபெற உள்ளன. [அ]

## மட்டக்களப்புப் பகுதியில் கல்வி, தொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 18

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா வாகரை, மாங்கேணி, கதிரவெளி ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் கல்வி, சுகாதார, தொழில் வசதிகள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளதாக தெரிய வருகிறது.

மாங்கேணி, கதிரவெளி ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. வாகரையில் உள்ள வைத்தியசாலையில் போதிய வசதிகள் இல்லாது உள்ளன. இப்பகுதிகளில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கேயுள்ள சில பாடசாலைகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன:

மீன் பிடித் தொழிலை நம்பி வாழ்ந்த இப்பகுதி மக்கள் தற்போது இராணுவக் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன. [த-5]

### சந்தேக நபர் ஆஸ்பத்திரியில் அனுமதி

ஜனாதிபதி பிரேமதாஸாவை கொலை செய்யும் சதியில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்யப்பட்ட வட மத்திய மாகாண சபை உறுப்பினர் நிஸங்கா திஸநாயக்கா இருதய நோய் காரணமாக அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பொலீஸ் பாதுகாப்புடன் அவர் வார்டில் சிகிச்சை பெற்று வருகிறார். [த-எ]

### கிளிநொச்சியில்

## 110 தம்பதியருக்கு திருமணப் பதிவு

முறிகண்டி, ஆக 18

திருமணப்பதிவு செய்து கொள்ளாத 110 தம்பதியருக்கு கிளிநொச்சியில் திருமணப் பதிவு செய்து வைக்கப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி அம்பாள் குளம் கிராமசேவையாளர் பிரிவில் 35 தம்பதியருக்கும்.—

கடந்தவாரம் கிளிநொச்சி உதயநகர் மேற்கு -கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் 75 தம்பதியினருக்கும் திருமணப்பதிவுகள்இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று அம்பாள் குளத்தில் இடம் பெற்ற திருமணப் பதிவு வைபவத்தில் உதவி அரசாங்க அதிபர் செல்வி ந. இந்துமதி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ஆனந்தநகர் கிராம முன்னேற்றக் கட்டடத்தில் இடம் பெற்ற இந்த வைபவத்தில் விவாகப் பதிவாளர் திரு. ந. சதாசிவ ஐயர் திருமணப் பதிவுகளைச் செய்தார்.

கடந்த வாரம் உதயநகர் மேற்கு — கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் நடந்த திருமணப் பதிவு வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் உட்பட பல. பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [இ-ரி]

### உற்சவ கால சமய அறிவுப் போட்டி

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர் வழமைபோல இவ் வருடமும் நல்லைக் கந்தன் உற்சவத்தையொட்டி சமய அறிவுப் போட்டியை நடத்துகிறார்கள்.

போட்டியில் திறமையுடன் சித்தி எய்துவோருக்கு முதற் பரிசாக ஆயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக ஐநூறு ரூபாவும், மூன்றாவது பரிசாக இருநூற்றிஐம்பது ரூபாவும் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

தலா நூறு ரூபா கொண்ட பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். [அ]

## தமிழரின் சரித்திர பூர்வ பதிவுகளை அழியாமல் பாதுகாக்க வேண்டும்

### பாராட்டு விழாவில் உரை

உடுவில், ஆக. 18

தமிழரின் சரித்திரபூர்வமான பதிவுகள், சுவர்ச் சித்திரங்கள், ஓவியங்கள் போன்றவை இன்று அழிந்துபோகும் நிலையில் உள்ளன. கலை நுட்பம் நிறைந்த கோபுரங்கள் அழிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க வேண்டும். கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரையின் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு பேசும் போது இளைப்பாறிய சித்திர பாடக் கல்விப் பணிப்பாளர் பிரதிமை கலைமாமணி திரு. இராசரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை கலை இலக்கியக் கழகத்தின் ஏற்பாட்டில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

திருகோணமலை கோணேசர் கோவில் கடல் பிரதேசத்தினுள் தமிழரின் பண்பாட்டுக் கலைகளை விளக்கும் சிற்பங்கள், சிலைகள் போன்ற கலைச் செல்வங்கள் அமிழ்ந்து போயுள்ளதை ஜேர்மன் நாட்டு சுழியோடிகள் வந்து பார்த்து படம் பிடித்துள்ளனர்—

எனவே தமிழரின் பாரம்பரிய நாகரிக கலைகளை வெளிக்கொணர, கலை இலக்கிய ஆர்வமுடையவர்களும், பல்கலைக்கழக கல்விமான்களும் வழிசெய்ய வேண்டும்— என்றார்.

[illegible] தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலாகேசரிக்கு 'மணிவிழாப் பட்டயம்' அன்பளிப்பு செய்யப்பட்டது. [த-152]

நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

## விடுதலையைப் பொழிய வருக!

பொங்கும் தமிழர் தம்மினத்தின்
பொல்லாப் பகையை வெற்றிகொளும்
பொசிப்பாய் வருக! விடுதலையைப்
பொழிய வருக! நல்லூரா!

எங்கும் இந்த நிலவுலகில்
ஏற்றம் பெற்று இருந்ததுபோல்
இன்றும் வாழ வகை செய்வாய்
எழிலாய் வருக! வருகவே!

— முருகனடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாவைச் சந்திக்கப்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ பலாலி தளத்தில் மே மாதம் 30 ஆம் திகதி பிரிகேடியர் விஜய விமலரத்னவைச் சந்தித்தேன். அவரது கை மணிக்கட்டில் வெள்ளை நூல் கட்டப்பட்டுள்ளது. யுத்தத்தில் அவரைக் காப்பாற்றுவதற்காக பௌத்த பிக்கு ஒருவர் அந்த நூலைக் கொடுத்திருந்தார்.

★ இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர், யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ தாக்குதலை படையணித் தளபதியாக வழிநடத்தியவர் விஜய விமலரத்னா.

★ ''1987 இராணுவ நடவடிக்கை கடுமையானது'' என்று கூறும் விஜய விமலரத்தினா, ''இப்போதைய யுத்தம் மிகக் கடுமையானது. இந்தியர்களுடன் யுத்தம் நடத்தியதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நிறைந்த நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்'' — என்றார்

★ ''இப்போது நாங்கள் உலகிலேயே மிகச் சிறந்த பயிற்சி பெற்ற. — மிகச் சிறந்த போர்க் கருவிகள் மற்றும் ஆயுதங்களுடன் கூடிய உயர் இலட்சியப் பற்றுக் கொண்ட — கெரில்லா படை ஒன்றை எதிர்த்து யுத்தம் நடத்திக் கொண்டிருக்கின்றோம்'' — என்று விஜய விமலரத்தினா தெரிவித்தார்

★ பலவீன இராணுவம் சண்டை இடுகின்றது: இரவு விடுதலைப் புலிகளுக்கு சொந்தமாகிறது

★ ''எப்போது யாழ்ப்பாணத்தைப் பிடிக்கப் போகின்றீர்கள்'' — என்று நான் விஜய விமலரத்னாவைக் கேட்டேன்.

''கடந்த டிசம்பரில் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இராணுவம் திட்டமிட்டிருந்தது''— என்று விமலரத்தினா பதிலளித்தார்.

★ யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கு விமலரத்னா முயற்சி எடுத்துக் கொண்டிருந்த சமயம், இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. வடபகுதியில் இருந்து துருப்புகள் கிழக்குக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டன.

''அப்போது அவர்களை தோற்கடித்திருக்க முடியும்''. என்றார் விமலரத்னா.

★ இம்முறை யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பிடிக்கப் போகின்றீர்களா?'' — என்று நான் கேட்டேன் அதற்கு விமலரத்னா ''முதலில் அவர்களின் உறுதியை உடைத்தெறிய வேண்டும். யாழ் குடாநாட்டை பிடிப்பதற்கு'' என்றார்.

''அப்படியானால் சிவிலியன்கள்? என்று நான் கூற —

''யாழ்ப்பாணத்தை அதிக சிவிலியன் இழப்பு இன்றி பிடிக்கலாம் என்பதை இந்த யுத்தம் நிரூபிக்கிறது'' — என்றார் விமலரத்னா.

''மேலும், எமது உத்தி யாழ்ப்பாணப் பட்டினத்தைப் பிடிப்பது அல்ல, சிவிலியன்கள் அங்குபோக முடியும் அல்லது விடுதலைப் புலிகள் அனுமதிப்பின் தீவகப் பகுதிகளுக்குச் செல்லலாம்'' —என்று சொன்னார் விமலரத்னா.

★ தெல்லிப்பழையில் நான் பிரிகேடியர் விமலரத்னா மற்றும் ஜெனரல் கொப்பேகடுவ ஆகியோருடன் சென்றேன். ''விடுதலைப் புலிகள் நன்றாக போரிட்டார்கள்''— என்று பிரிகேடியர் விமலரத்னா என்னிடம் சொன்னார்.

★ தெல்லிப்பழை யுத்தம், அதனால் ஏற்பட்ட யுத்தம் ஆகியவை பற்றிக் குறிப்பிடுகையில்—

''இவ்வளவு சண்டையும் உயிரிழப்பும் காயமும் எதற்காக? எமது விமானத் தளத்தின் மீது மோட்டார்த் தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் பகுதிகளை எமது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும் என்பதற்காகவே. இது ஒரு அறிவற்ற யுத்தம்''— என்றார் விமலரத்னா.

★ விமலரத்னாவிடம் இருந்து நான் விடை பெறுகையில்—

''யாழ்ப்பாணத்தில் திரு. பிரபாகரனை நான் சந்திக்கக் கூடும். அவரிடம் தெரிவிக்க செய்தி ஏதும் உண்டா?''— என்று அவரைக் கேட்டேன்.

அதற்கு விமலரத்னா புன்சிரிப்புடன்—

''அவரிடம் சொல்லுங்கள், மறுபக்கத்தில் அவரைச் சந்திக்க ஓர் பிசாசு காத்திருக்கிறது''— என்று அவர் கூறினார். [உ-எ]

## அதிபர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
புள்ளி 150 ஆகும்.

அதிபர் தரம் 2க்குரிய வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு:-

இலங்கைத் தமிழர் — 163, சிங்களவர் — 175, முஸ்லிம்கள் — 163, இந்தியத் தமிழர் — 134.

அதிபர் தரம் 3க்குரிய வெட்டுப் புள்ளிகள் வருமாறு:-

இலங்கைத் தமிழர் — 83, சிங்களவர் — 94, முஸ்லிம்கள் — 90, இந்தியத் தமிழர் — 42.

இதேவேளை—

31-12-1977க்கு முன்னர் அதிபர் தரம் - 2க்குப் பதவி உயர்வு பெற்றவர்கள் அதிபர் தரம் - 1க்கும்—

1-1-1985க்கு முன்னர் அதிபர் தரம் - 3க்குப் பதவி உயர்வு பெற்றவர்கள் அதிபர் தரம் - 2க்கும் முற்றிலும் சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்த்தப்படுவார்கள். [அ]

## ஆங்கில...

[2 ஆம் பக்கம் பார்க்க]

ஆங்கில பாடத்தில் மூன்று மணித்தியாலப் பரீட்சை ஒன்றை பரீட்சைத் திணைக்களம் நடத்தும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி இம்மாதம் 24 ஆம் திகதியாகும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான ஏனைய தகுதிகள், விவரங்கள் கடந்த மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வெளியாகி உள்ளது.

பிரஸ்தாப வர்த்தமானியின் பிரதிகளை —

இல: 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையிலும் —

82, காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்தில் உள்ள உதயன் சேவை நிலையத்திலும் — வாசகர்கள் பார்வையிடலாம்

வர்த்தமானியின் பிரதிகளை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும் —

யாழ். கல்வித் திணைக்களத்திலும் — பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## இன்றைய ஆட்டங்கள்

மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்து மைதானத்தில் நடத்தும், 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ சென். மேரீஸ் ''பி'' அணி எதிர் சென். றோக் அணி.

★ யுத்வார்மேக் அணி எதிர் பாடு மீன் மஞ்சள் அணி.

## நல்லூரில் இன்று

கொழும்புத்துறை, ஆக 18
நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் — 16 ஆம் திருவிழாவான — இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு.

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் [மாலையில்] — மேரி சரோஜா ஜஸ்ரினின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] — கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''பானுகோபன்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப் பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்தபுராணப் படிப்பு, பிற்பகல் 3.00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. (உ-30-126)

## முதலைக்கு இளைஞன் பலி!

கொழும்பு, ஆக. 18
கடந்த வாரம் மட்டக்களப்பு வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த — கோயிற் போரதீவைச் சேர்ந்த — சிவப்பிரகாசம் சின்னவன் (வயது 15) என்ற இளைஞனை முதலை இழுத்துச் சென்றுள்ளது

வாவியில் இவரின் தந்தை வீசிய வலையில் ஏதோ சிக்கிக் கொண்டது என்றும்—

அதனை எடுத்து விடும்படி தந்தை கேட்டதை அடுத்து இவர் வாவியில் சுழியோடி வலையை விடுவிக்க முயன்ற போது முதலை வாயில் இளைஞன் சிக்கினான் என்றும் கூறப்படுகிறது.

இதுவரை இளைஞனின் சடலம் மீட்கப்படவில்லை.

## நேற்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கா. மாணிக்கவாசகருடன் தொடர்பு கொண்டு துரித நடவடிக்கை எடுத்ததை அடுத்து ப. நோ. கூ. சங்க லொறி மூலம் இம்முறை தபால் பொதிகள் உடனடியாக யாழ். தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன என்று தெரியவந்தது. [உ-3-5]

## சந்தேக..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஆவர்.

பிணையில் விடப்பட்டிருக்கும் முன்னாள் மாநில உள்துறைச் செயலாளர் நாகராஜன், வழக்கறிஞர்கள் வீரசேகரன், மருதநாயகம் ஆகியோர் நீதிமன்றத்தில் தனித் தனியாக தெரிபட்டனர்.

இம் மாதம் 27 ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்ட அனைவருக்கும் குற்றப்பத்திரிகைகள் வழங்கப்படும் என விசேட நீதிபதி சௌந்தர பாண்டியன் தெரிவித்தார். வழக்கு விசாரணை இம் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [உ-எ]

## இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பிப்பதற்குத் தேவையான இராணுவத் தளபாடங்கள் மற்றும் ஆயுதங்கள் போன்றவை கடந்த இரண்டு தினங்களாக, இரவு இரவாக அனுராதபுரத்தில் இருந்து பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இராணுவத் தளபதிகள் டென்சில் கொப்பேகடுவ விஜய விமலரத்ன ஆகியோர் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கைகள் ஒரு சில மாற்றங்களுடன் வடக்கில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என வடபிராந்தியத்தின் புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் [illegible] [உ-3]

## அதிபர் பதவி உயர்வுக்கு 25 இல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக 18
அதிபர் தரம் 2க்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 25, 26, 27ஆம் திகதிகளில் பத்தரமுல்லையில் உள்ள இசுறுபாயாவில் நடைபெற உள்ளது

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 88 பேரின் பெயர் விவரங்கள் கிடைத்துள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை இல. 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும் இப்பட்டியலைப் பார்க்க முடியும்.

நேர்முகப் பரீட்சைக்கு எடுத்துச்செல்ல வேண்டிய பத்திரங்கள் மற்றும் சுயவிவரங்கள் தொடர்பான படிவங்களையும் அங்கு பெற்றுக் கொள்ளலாம். என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார். [அ]

## ஆஸி - 256 ஓட்டங்கள்

கொழும்பு, ஆக. 18
ஆஸ்திரேலிய — இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று கொழும்பு எஸ். எஸ். ஸி மைதானத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது

இயன் ஹீலிஸ் - 66, டேவிட்பூன் - 31, மார்க் டெய்லர் - 41 ஓட்டங்களைப் பெற்றனர். சாந்திக ஹத்துருசிங்க 65 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் சாந்திக ராமநாயக்க 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலங்கை அணி நேற்று முதலாம் நாள் ஆட்ட முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. [உ-3]

## மாவீரர் தினத்தை முன்னிட்டு:

## பயன்தரு மரக்கன்றுகளை நடுகை செய்ய முடிவு!

யாழ்ப்பாணம் ஆக. 18
இவ் வருடம் நடைபெற உள்ள மாவீரர் தினத்தை ஒட்டி பயன்தரு மரங்களை நடுகை செய்து பராமரிக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் திட்டமிட்டுள்ளது. இதற்கென நாற்று மேடைகளில் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை—

கடந்த வருடம் மாவீரர் தினத்தை ஒட்டி கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடுகை செய்யப்பட்ட பயன்தரு மரங்கள் தற்போது பராமரிப்புக் கூடுகள் அமைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது விறகுத் தேவைக்காகவும், பிறதேவைகளுக்காகவும் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இது சூழல் சமநிலையைப் பெரிதும் பாதிக்கும் என்பதைக் கருத்திற் கொண்டே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மரக்கன்றுகளை நடுகை செய்து பராமரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [த]

## நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 18
ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து ஆகஸ்ட் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மாவீரர் பணிமனை — வலிகாமம் கோட்டப் பிரிவு — வட்டரீதியாக நடத்தி வருகிறது

அத்தொடரில் நாளை இரவு 7.30 மணிக்கு சங்கானை வட்டத்தில் சிலம்புப் புளியடி வைரவர் கோவிலில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும். [உ]

## கொப்பே..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிறது.

வவுனியா மக்களின் பிரச்சினைகளை தெரிவிப்பதாக அந்த வீடியோ நாடா தயாரிக்கப்பட்டிருந்ததாக வவுனியா மாவட்ட இராணுவ பொறுப்பு அதிகாரி கேர்ணல் கலுப்பஹான, கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இரங்கல் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். [த-எ]


## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை சுப்பிரமணியம்

மல்லாகத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் [சங்கீதம்] கந்தப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்றுக் காலமானார்.

இவர் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, பாலேஸ்வரி, தேவேஸ்வரி, ஜெகதீஸ்வரி [சிங்கப்பூர்], யோகேஸ்வரி [கனடா], லோகேஸ்வரி [பிரான்ஸ்], ஞானேஸ்வரி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும் —

காலஞ்சென்ற க. நடராஜா [முன்னாள் இ. போ. ச. ஊழியர்], அன்னபூரணம் [ஆஸ்பத்திரி—சங்கானை], அன்னராசா [கனடா], அழகராசா [பிள்ளையார் டிரவல்ஸ்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
க. அழகராஜா.
[மைத்துனன்]

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(22212)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இல. 361இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org